401. ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா
அருளினார் நபிசொல்லக் கேட்டேன்
வாயினால் வல்லி மடந்தைமேலே
வலிய கடனுள்ளான் கணவனென்றே

402. வல்லிமார் தங்கள் புருஷருக்கு
வழிப்பட்டிருப்பது பீஸபீலின்
நல்லபெருங்கூலிக்கு எதிராமென
நயினார் முஹம்மது நபி ஓதினார்

403. உச்சிதொடுத்து உள்ளங்கால் மட்டாக
ஊனும் சீழுமாய் ஒலித்தோடினால்
இச்சையுடன் சென்று நாவினாலே
இனிதாய் உறிஞ்சினாலுமவன் தன்

404. துச்சமி றுத்தவளல்லவென்று
தூதர் முஹம்மது சொன்னாரென
இஜ்ஜத் அணுகிய இப்னு ஹிப்பான்
ஏற்றமுள கிதாபினில் உரைத்தார்

405. ஒருவர்க்கு ஒருவர் தான் ஸுஜுது செய்ய
உண்மையுடன் இருந்தால் அப்போது
புருஷன் தனக்கு பெண்சாதி தண்டம்
பேணிஇட ஏவல் செய்வேன் என்றார்

406. ஒட்டை மறுகையில் இருந்தாலுமாம்
உடனே இறங்கித் தன் புருஷனுக்கு
கெட்டியாய் வழிப்படாதவளுக்கு
கிருபையுள ஈமான் கிட்டாது என்றார்

407. பெண்ணாய்ப் பிறந்தவள் வீடுவிட்டுப்
பிரிந்தால் அவளுக்கு இறைமுனிவும்
விண்ணேழ் தனிலுள்ளோர் முனிவுகளும்
விரைந்து வருமென்றார் நபிகள் கோமான்

408. அடுப்பங்கரைதனில் இருந்தாலுமாம்
அழகாம் புருஷன் தன் கருமத்துக்கு
படுக்க அழைத்தாற்கால் உபயப்பட
வாஜிபாம் என்றார் வள்ளல் நபி

409. காலம் அடங்கலும் தொழுதாலுமாம்
கணவன் முனிவான பெண் தொழுகை
கோலம்பெற அவள் செவியைவிட்டு
குணமாயுயராது என்றார் இரசூல்

410. வெளியில் மணம் வீசப்போற பெண்கள்
விருப்பமுடன் தொழும் தொழுகை எல்லாம்
அழியுமெனச் சொன்னார் நபி எனவே
அண்ணல் அபூஹுரைரா உரைத்தார்

411. முற்காலந்தனிலுள்ள பெண்கள்
முனிவாய் ஹலாக்கான காரணீகம்

திக்காம் வெளிதனில் அலங்கரித்துச்
சிறப்பாய் பிறப்பிட்டபடியால் என்றார்

412. கணவன் முகத்தினில் கடுகடுப்பு
கருத்தாய் காட்டினோர்க்கிறை முனிவு
மணமாய் பிரியமுண்டாகு மட்டும்
வாகாய் இருக்குமென்றார் இரசூல்

413. பெண்ணாய்ப் பிறந்தோரில் நாலுவகை
பெரிய தீயினில் புகுவார் என்றார்
கண்ணால் தெரிசிக்க ஹறாம் புருஷர்
காண அலங்காரமாய் நிற்போரும்

414. உண்ணான் உறங்காதான் வணக்கமன்றி
ஊண்தீன் தனில் பராக்காகும் பெண்ணும்
ஒண்ணா வருத்தமாம் காரியத்தை
உகந்து புருஷன்மேல் போடும் பெண்ணும்

415. வந்த புருஷனை வாயினாலே
வண்மை உரையாமல் நோவித்தோரும்
இந்த வகை நாலுவல்லியரும்
எரியும் நரகத்திலாவார் என்றார்

416. தலையை மறையாமல் நின்றோர்கள்தான்
தண்மைமுடியின் மேல்கொளுக்கியிட்டு
உலையும் பெரும்தாள்வில் கிடக்கிறது
உண்மைநபி கண்டேனென நவின்றார்

417. நாக்கில் சில பெண்ணைக் தூண்டிலிட்டு
நரகந்தனில் தூங்கக்கண்டேன் அப்போ
வாக்காய் ஜிப்றயீலோடு கேட்டேன்
வண்மை அணுகாதாளார் எனவே

418. அப்போதுரைத்தார் என்னோடு ஜிப்ரீல்
ஆகா உரையாகப் புருஷன்தன்னை
செப்பி உரைத்தவள் இவளாம் என
ஜிப்ரீல் சொன்னார் என்னுடனே

419. மார்பில் சில பெண்ணைத் தூண்டிலிட்டு
வாகாயிருக்கக் கண்டேன் அப்போது
சீராம் ஜிப்ரிலோடு கேட்டேன்
செப்பும் இவள் யாரோ மொழிவீர் என

420. நேராம் புருஷனோடு இணக்கமாக
நெறியாய் அணையாத மாதரென்றார்
ஆராகிலும் இந்தப்படி இருப்போர்
அதாபுதனை அஞ்சி நடப்பீர்களே

421. காலில் தளைபோட்டு மார்புடனே
கையில் தளையை முன்னெற்றியுடன்
கோலம்பெறக் கட்டியிருக்கும் பெண்ணும்
கொடுமை நெருப்பிலே காய்ந்த தண்ணீர்

422. கோலம்பெற அவள் அலையில்விட
கொடிதாய் உருகியே  ஆறு போலே
ஏலவோடவே ஜிப்ரீல் சொன்னார்

இவள்தான் முழுகாமல் இருந்தாள் என்றே

423. பன்றித்தலையாக உடல் கோகுபோல்
பளீஹத்தணுகிய கோலந்தன்னில்
கண்டு ஜிப்றயீலோடு கேட்டேன்
கவழ்வாரிவள் கோள் பொய் சொன்னாள்என்றே

424. தண்மையுள நாயின் கோலம் போல
தையல்தனில் சிலபேரைக் கண்டேன்
உண்மை ஜிப்றயீலோடு கேட்டேன்
உரைத்தார் சதக்காவை சொன்னாள்என்றே

425. இந்த விஷயங்கள் அடங்கலையும்
இனியமகள் பாத்திமாவுடனே
விந்தையுடன் சலித்தழுதழுது
விளம்பினார் வேதநபி எனவே

426. பந்தமுகமுள்ள நாச்சியாரை
பரிவாய்க் கலியாணஞ் செய்திருந்த
இந்துநிலாவொளி போலுதித்த
எங்கள் அலியுல்லாஹ் இயம்பலுற்றார்

427. கண்ணின்மணியான என்மகளே
கடிந்த அதாபெல்லாம் புருஷருடன்
மண்ணில் மணமாக இராதார்க் கென்ன
வரிசைமிகவுள்ள நபி ஓதினார்

428. வீடுதனில்இருந்தால் ஆதிக்கு
முடகியிருப்பாள் என்றார் இரசூல்

கூடாம்மனைதனில் சிறைப்படுத்தி
கொள்ளுங்கோ என்றார் நபி இரசூல்

429. குருடரொருதனார் வந்தளவில்
கோஜாநபி சொன்னார் கோதையர்க்கு
பரிவாய் மறைந்து கொள்வீர்களென்று
பாங்காய் மறைந்தனர் பாங்கிமார்கள்

430. தந்தைதனை அன்னையுடற் பிறப்பை
சங்கையுடன் காணவேணுமாகில்
அந்தமுள கணவன் விடையால்
அழகாய் ஜியாரத் செயலாமென்றார்

431. கோலநிறமன்றி அழுக்கணிந்து
கூசிவலமிடம்பாராமலே
ஆலம் அமைத்தோனை மனதில் எண்ணி
அஞ்சி ஜியாரத் செய்யலாம் என்றார்

432. புருஷனிடத்திலுண்டான தீங்கின்
பொல்லாக் குணத்திற்கு ஸப்ரு செய்தால்
பெரியோனவளுக்கு அளிப்பான் கூலி
ஆயிஷாக்கு ஈந்த கொடைபோலென்றார்

433. ஆணாய்ப் பிறந்தவன் பெண்சாதியின்
அசட்டுக் குணத்திற்கு பொறுத்தானாகில்
ஊணான் உறங்கான் அய்யூபின் கூலி
உகப்பாய்க் கொடுப்பானென்றார் இரசூல்

434. குற்றம் குறையன்றி யெனைதலாகு
கூறுவாயென்று புருஷருடன்
வெற்றிபெறச் சொன்ன ஆயிழைக்கு
விஸ்திலுள வாடை ஹராமாம் என்றார்

435. தந்தங்குடும்பத்தில் ஒரு பொல்லாங்கு
சங்கை அணுகாமல் நடக்குதென்றால்
பெந்தமணுகாத தய்யூதுக்கு
மேலாம்பதி சொர்க்கம் ஹராமாம் என்றார்

436. கலியாணப் பந்தல்தனில் விடுவோர்
கடலாற் புனலாட கப்று காண
சலியா மனமாக விடை கொடுத்தோர்
தய்யூதானோரில் கெட்டோர்களே

437. வரிசைமிகவுள்ள மு.்.மீன்களை
வசையாய் உரைப்பது பிசகெனவும்
கருதி அவரோடு வாள் எடுத்து
கைசெய்வது குபிராகும் என்றார்

438. வண்மையுள மு.்.மினானோர்களை
வசையாய் ல.்.னத்து செய்கிறது
தண்மையணுகுவோன் அவனைக் கொலை
சங்கை அணுகாமல் செய்வோர் என்றார்

439. வரிசை நபியுல்லாஹ் முனிந்தபேரை
வாகாயுரைக்கிறேன் மு.்.மினானோர்
பரிசுபெறக் கேட்டுநடந்துக் கொள்வீர்
பதியிலுள பேர்கள் அடங்கலுமே

440. பலிசைக் களித்தோர்கள் வாங்கினோர்கள்
பரிவா எழுதினோர் சாக்கிக்காரர்
கிலுசை கெடுரூபம் தனைச்சமைத்தோர்
கீழாம் மிருகத்தோ டணைவோர்களும்

441. ஊரார் நிலந்தன்னை ஹக்கன்றியே
உகந்திங் கெடுத்தோரும் கண்ணில்லானை
நேராம் வழிகெடுத்தோர்களையும்
ல.்.னத்து செய்தார் நபி இரசூல்

442. லூத்து நபி கவ்மகள் அமல் செய்வோரும்
நன்மையணுகாக் கள் குடிப்போர்களும்
சாத்திரம் சொல்வோர் பக்கல் வந்து
சங்கையணுகாமல் கேட்போர்களும்

443. வல்லி மார்பினில் அணைந்தோர்களும்
மாதவிடைதன்னில் அடுத்தோர்களும்
சொல்ல ஹராமான ஒப்பாரிகள்
சொல்லி அழுவோரும் சூழ்ந்தோர்களும்

444. பின்னில் தொழுவோர்கள் பொருத்தமற்ற
பிரிசமணுகாத இமாமவனும்
மன்னனென மகமுடையான் தன்னை
வாகாய் வெறுத்துப்பாய் அகன்றவளும்

445. ஆகாக் களவுகள் செய்வோர்களும்
அஸ்ஹாபிமாரை வைவோர்களும்
ஏக பெரியவன் அம்றுநஹீ
இம்மைதனில் விட்ட பேர்களுமாம்

446. பூவை மார்கோலம் கொண்டோர்களும்
புருஷன் மார்வேஷம் கொண்ட பெண்ணும்
பார்வைதனில் ஸுர்மா இடாளும்
பரிவாய் மருதோன்றியிடாத பெண்ணும்

447. புருஷன்தனைப் பயல் வெள்ளாட்டியை
பொல்லாவுரையினால் பிரிப்போர்களும்

கருவிதனைக் கொண்டு உடம்பளவில்
கருத்தாய் இஷாரத்துக் காட்டுவோரும்

448. ஜக்காத் அளியானும் தன்வங்கிசம்
தள்ளி ஒரு இனம் சேர்வோர்களும்
ஹக்காய் உரிமை விட்டோனை விட்டு
கருதி ஒருத்தன் பால் சேர்ந்தவனும்

449. சூடுவதனத்தில் வைத்தவனும்
துய்யபுருஷன் உத்தாரமன்றி
வீடுதனைவிட்டுப் பிரிந்தவளும்
மேலோன் ல.்.னத்தில் ஆவாரென்றார்

450. கள்ளுக் குடித்தோரும் அதற்கு ஒத்தாசை
கருதிகருத்தாகச் செய்வோர்களும்
தெள்ளிதாய் கப்றுதனில் விளக்கு
தீங்காக வைக்கும் பேர்கள் மேலும்

451. கள்ளனெனும் பாவிஹத்துதன்னை
கருத்தாகச் சென்று விலக்குவோனும்
வள்ளலெனும் பெரியோன் இவரை
வாகாய் முனிவான் என்றார் இரசூல்

452. அயலாம் திரீயுடன் அணைந்தவரும்
ஆகாநிகாஹு கையாற்செய்வோரும்
பயலாம் அடியாரை ஹக்கன்றியே
பதற அடிப்போரும் ஆகும் என்றார்

453. தாயும் மகளையும் வைதோரையும்
சாடையுரைப்போரும் கைக்கூலிகள்
ஞாயஹுக்மிலே வாங்குவோரும்
நலவான இல்மை மறைப்போர்களும்

454. தவசம் தனைக்கட்டி விலையேறவே
சங்கையணுகாமல் விற்போர்களும்
தவனமாய் வந்த முஸ்லிம்கட்கு
தகுமாய் உதவி செய்யாதவரும்

455. கிருபை அணுகாத ஸுல்தான்களும்
கிளையோடு உறவில்லா முறிந்தோர்களும்
நெறியாய் நிகாஹு செய்யாதவரும்
நிலத்தில் பித்அத்துச் செய்வோர்களும்

456. தனியஸபர் செய்வோர் உயிர் வஸ்துவை
சாத்தியிலக்காக எய்வோர்களும்
முனிவாம் மக்றுகள் செய்வோர்களும்
மோசமுள ராகம் பாடுவோரும்

457. கப்றுதனில் பினா எடுப்போர்களும்
கப்றுதனைக் காணும் வல்லியரும்
சபையின் நடுவிலே இருப்போர்களும்
ஜானிதனில் கிழடாணுமாமே

458. வெட்டைதனில் நிற்கும் நிழல்மரத்தை
வெட்டிக்களைவோரும் சொக்கட்டான்கள்
நட்டிவிளையாடும் தோசிகளும்
நாயன்களாவைப் பெய்யாக்கினோனும்

459. வேற்றுமுடிமயிர் சேர்க்கும் பெண்ணும்
மென்மையுள சட்டை தன்னையிட்டு
ஏற்றபருமுறியுள்ளி லிடார்
இவர்கள் லஃனத்திலாவார் என்றார்

460. எந்தன் நடவடிவிட்டோர்களும்
ஏகன் குர்ஆனைப் பேதகமாக்கியும்
அந்தமுளவல்லி தன்னைவிட்டு
அவள்தன் குழந்தையைப் பிரித்தோர்களும்

461. இந்தவகையான பேர்களெல்லாம்
ஏகன் முஹம்மது நபி இரசூல்
சந்தமுற முனிந்தோர்களென
ஜவாஜிர் எனும் கிதாபில் உரைத்தார்

462. ஆகாஜினாச் செய்து பிள்ளையுண்டாய்
அழகாம் கணவன் தன்பிள்ளை என்று
வாகாய் உரைப்போர்கள் வரிசைப்பதி
வண்மையுடன் புகமாட்டார் என்றார்

463. தகப்பன்தனை நன்றாய் அறிந்திருந்தும்
சங்கையணுகாமல் ஒருவன் தன்னை
உகப்பாய் தகப்பன் என்றுரைப்போர்கட்கு
ஓசைப்பதி சொர்க்கம் ஹராமாம் என

464. துகைப்பாம் குணமில்லா ஸஃதிப்னு
துய்ய அபூவக்காஸ்க்குஉரைத்தார்எங்கள்
பகைப்பாம் குணமில்லா நபி இரசூல்
பகர்ந்தார் எனச் சொன்னார் பரிவாகவே

465. தந்தந் தகப்பனைப் புறக்கணித்தோர்
சங்கையுள தம்பிரான் தனக்கு
விந்தையுள குபிர் செய்தார் என
வேத முஹம்மது நபியோதினார்

466. பாவம் தனக்கெல்லாம் போதுமாகும்
பரிவாய்ப்படி அளிக்கும் பேர்களை

நாவால் மனதினால் பொருத்தமற்று
நலவாம் படிகொடாது இருப்பதென்றார்

467. முந்தசுவர்க்கத்தி லாவார் மூவர்
மோசமணுகிய மாற்றலார் முன்
அந்தமுடன் பட்டோர் அடியார் தம்மில்
அழகாய் இபாதத்து செய்வோர் பின்பு

468. பெந்து குடும்பங்கள் மிகுத்தோனுமாய்
மேன்மையுடன் ஸுவால் கேளானுமாய்
சந்தமுற விருப்போர் முவ்வரும்
சங்கைப்பதி முந்திப் புகுவார்களே

469. மூன்று வகையார்கள் முந்தமுந்த
மோசமுற விழுவார் நரகில்
ஆண்டான் உடமைக்கு ஜகாத்திடானும்
அமீராம் தலைவரில் வம்பர்களும்

470. தாண்ட வெளியாரில் படிறுள்ளானும்
தண்மை மிகவுள்ள இம்மூவரும்
துாண்டா நரகத்தில் முந்தவிழும்
தோஷி இவராகும் என்றார் நபி

471. உனக்கும் உனது பிள்ளைகளுக்கும்
உந்தன் ஹலாலுக்கும் உன் ஆளுக்கும்
கணக்காய் அளிப்பது ஜகாத்தாம் என்று
காவல் முஹம்மது நபி ஓதினார்

472. உயர்ந்த கரம் தாழ்ந்த கரந்தனிலும்
உடையோன் இடத்திலே வரிசை என்றும்
அயர்ந்த குணமில்லா நபி இரசூல்
அமர்ந்த மொழியாக அருளிச்செய்தார்

473. அன்னை பிதாவுக்கும் குழந்தைகட்கும்
அவன்தான் உகப்பாய்ச்சென்றெழுந்திரணம்
உன்னிமனம் வைத்துத் தேடுவோர்க்கு
உண்மையுள பீஸபீல் பதவி

474. மின்னத்துள ஆதிகொடுப்பான் என
மேலாம் முஹம்மது நபி சொன்னார் என
அன்னம் எளியோர்க்கு அளிக்கும் எங்கள்
ஆலிம் தபரானி அருளிச்செய்தார்

475. இம்மைதனிலே தன் குடும்பத்திற்கு
இனிதாய்ச் செலவிட்ட ஹக்கை நாயன்
நன்மையுள தட்டில் வைப்பான் என
நபிமார்க்கு அரசானோர் நவின்றுரைத்தார்

476. உந்தன் குடும்பத்திற்கு அளிப்பதெல்லாம்
உயர்ந்த சதகாவாய் இருக்கும் என்று
முந்தமயில் வேஷமாய் மரத்தில்
முதல்வனைத் துதித்தோர் உரைத்தார்

477. ஆ(யா)ருக்காகிலும் பெண் பிள்ளைகள்
அவனிதனிலுண்டா இருந்தால் அவன்
சீருக்கு நன்றிசெய்தால் ஆதி
ஜன்னத் எனும் பதி சேர்ப்பான் என்றார்

478. சங்கையுடன் ஒரு பெண்பிள்ளையை
தகுமாய்வளர்த்து வாழ்வித்தோர்கள்தான்
தங்கப்பதி சொர்க்கம் தனில் என்னுடன்
தகுமாய் வருவார் என்று இருவிரலை

479. திங்கள் தனைப் பிளந்து ஒட்டிவித்த
சீமான் நபி நீட்டி காட்டினார் என்று
எங்கும் திசையான இமாம் முஸ்லிம்
இனிய கிதாபினில் இயம்ப லுற்றார்

480. உண்மை நபி தம்மை கேட்டார் யார்கள்
உறுதியுள இந்தப்பதவி என்றோர்
செம்மையுடன் ஒரு பெண்பிள்ளையை
சிறப்பாய் வாழ்வித்தோர்க் குண்டாமென்றார்

481. உகப்பாய் வளர்த்த தாய்தந்தையரை
உறுதிபடப் பேசி நோவிப்பது
பகைப்பாம் குபிர் இணை தனக்குப்பின்பு
பாரப்பெரும் பாவமாகும் என்றார்

482. ஆகா உதாசீனம் செய்த பேர்கள்
அழகாய்மிக அமல் செய்தாலுமாம்
ஏகன் சுவர்க்கத்தில் ஏகார் என
இலங்கு முஹம்மது நபி ஓதினார்

483. அன்னை எனும் பெற்றாள் சொர்க்கத்துக்கு
அழகாம் நடுவாசல் ஆகுமென்று
மன்னர்நபி உரைத்தார் எனவே
வள்ளல் அபூதர்தா உரைத்தார்

484. ஆதி திருவுளம் தாய் பிதாவின்
அழகாம் திருவுளம் தனில் உண்டென்றும்
நீதன் முனிவு இவர் முனிவு தன்னில்
நிற்கும் எனச் சொன்னார் நிலவழைத்தோர்

485. வரிசையுள தாயை தந்தையரை
மனது சலிப்பாக வைத்தோருக்கு

அரியோன் பெருமுனிவு உண்டாமென
அறுசுதனில் சென்ற நபி ஓதினார்

486. பெற்ற தாய்தனைக் கீழ்ப்படுத்தி
பெண்ணை வரிசையாய் உயர்த்தினோர்க்கு
அத்தம் அணுகாதான் முனிவுடனே
அமரர் முனிவும் உண்டாகும் என்றார்

487. அன்னை தனைக் காணப் பெண்சாதியை
அழகாய் வரிசை வைத்தோன் கலிமா
உன்னி உரைக்க மாட்டாதிருந்தான்
உண்மை நபி வந்தும் ஆச்சுதில்லை

488. மன்னர் நபி ஏது குற்றம் என்று
வாயாலுரைத்தபின் தாயை மனம்
கன்ன மடந்தையர் வார்த்தை கேட்டு
கடுப்பு வருத்தியது என்றார் யார்கள்

489. சொன்ன மொழி கேட்டு நபியுல்லாவும்
தோழன்மாரோடு உரைக்கலுற்றார்
மின்னத்துள தாயை ஆள்விடுத்து
விரைதலுடன் கூட்டி வாரும் என்றே

490. வந்தவுடன் கேட்டார் பொறுப்பீர் என்று
வரிசையுள தாயார் பொறுத்தேன் என்றார்
அந்தமுள நபி கலிமா சொல்லென்று
அழகாயுரைத்தபின் உரைத்து இறந்தார்

491. எல்லா அமலிலும் மிக உகப்பாய்
இருக்கும் அமலேது என்று உரைத்தபோது
நல்ல பிதா அன்னை இருவருக்கும்
நன்றி எனும் வீறு செய்வது என்றார்

492. நேசமுள அன்னை தந்தையர்க்கு
நெறியாக நன்றி செய்வதுக்கு
பீஸபீல் நிகராகாது என
பிறையை அழைப்பித்த நபி ஓதினார்

493. தாயும் தகப்பனும் சுவர்க்கமென்றும்
தாழ்த்தல் மிகவுள்ள நரகமென்றும்
நாயன் வஹ்யதால் நபி இரசூல்
நன்மையுள யார்களோடு உரைத்தார்

494. வாசமுள பீஸபீலுக்கு என்று
வாகா எழுந்தானோடு உரைத்தார் உந்தன்
நேசமுள அன்னை ஹயாத்தோ என
நிகழ்த்தினார் அவர் ஹயாத் எனவே

495. ஆனால் பீஸபீலும் தாய் தகப்பன்
அவர்பாலிருக்குது அவர் கால் தன்னை
ஈன மறப்பற்றிப் பிடித்து நன்றி
இனிதாகச் செய்து இருப்பாய் என்றார்

496. தாய்க்கும் தகப்பனுக்கும் நன்றிகள்
தகுமாகச் செய்தோர் ஹயாத்தை நீளம்
ஆக்குவான் ஆதி என உரைத்தார்
அன்பியாக் கெல்லாம் அரசாய் வந்தோர்

497. குடல்வாய் முறித்தோரும் தாய்தந்தையை
குன்றமனது நோவித்தோர்களும்
கடலேழ் அமைத்தோனின் சொர்க்கவாடை
காணார் எனச் சொன்னார் ஹபீபு இரசூல்

498. பெந்தை முறித்தோர்கள் என்னுடனே
விரும்பியிருக்க வேண்டாம் எனவே
தந்திதனிலேறி நாளை வரும்
சங்கை முஹம்மது நபி சாற்றினார்

499. வங்கிசம் தன்னை முறித்திருக்கும்
வண்மை அணுகாதான் இருக்குகின்ற
சங்கை அணுகாத களரி தன்னில்
தக்கோன் ரஹ்மத் உண்டாகாது என்றார்

500. இனத்தை முறித்தோர்கள் இருக்குகின்ற
இலஃனத் இறங்கிய களரி தன்னில்
கனத்த வரிசை உண்டாகாதும்பர்
கணித்த இரணம் கொண்டு இறங்கார் என்றார்

501. சுற்றத்தாருடன் முறிந்தோர்களை
துய்ய பெரியவன் முறிவான் என்றும்
வெற்றியுடன் சேர்ந்த பேர்கள் தம்மை
விண்ணேழ் அமைத்தோனும் சேர்வான்என்றார்

502. பெந்து மனுவுடன் இணங்காமலே
வெறுப்பாய் இருக்கின்றோர் தங்களுக்கு
கெந்தமுள சொர்க்கம் ஹராமாம் என
கிருபை முஹம்மது நபியுரைத்தார்

503. வரிசையுள முஹம்மது பாகிரு
வாகா உரைத்தார் ஜெய்னுல்ஆப்தீன்
பிரிசமாய் என்னோடு உரைக்கலுற்றார்
பேணிப் பயந்துக் கொள் குடல்வாய்தனை

504. பிரிந்து வெறுத்தோரைச் சேர்ந்திராதே
பெரியோன் லஃனத் உண்டு அவர்களுக்கு

அரியோன் புர்கானில் மூன்று இடத்தில்
அழகாயிருக்கக் கண்டேனே என்றார்

505. குடும்பந்தனில் எளியார் இருக்க
கூறும் கீர்த்திக்காய் சதக்காச் செய்தால்
கெடும்பாம் சதகாவை படைத்த நாயன்
கிருபையுடனே தான் கூட்டான் என்றார்

506. வரிசையுள முஸ்லிம்கள் தன்னை
மனது வெறுப்பாய் நாள் மூன்றுக்கு மேல்
பரிவாயிருப்பது ஹறாம் எனவே
பகர்ந்தார் முஹம்மது நபி இரசூல்

507. மூன்று நாளைக்கு மேலாகவே
முனிவாய் வெறுத்திருந்தால் அவர்கள்
ஆண்ட பெரியவன் சுவர்க்கத்திலே
அழகாய்ப் புகுதார் என்றார் இரசூல்

508. உடப்பாம் முஸ்லிமை ஓராண்டாக
உள்ளம் பொருத்தக் கேடாயிருக்கில்
கெடுப்பாய் அவன் சோரி ஓட்டிவிக்கும்
கேடாம் பெரும்பாவம் போலாம் என்றார்

509. தாட்சி எனும் ஸலாம் செப்பினோர்கள்
தகுமாய் வெறுப்பை விட்டகல்வார் என்று
காட்சி முகத்தினில் செய்துவந்த
கருணை முஹம்மது நபி ஓதினார்

510. ஷஃபான் தனில் ஆதி இருவரன்றி
சங்கை முஸ்லிம்கள் குற்றம் தன்னை
தகுமாய் பொறுப்பான் என்றார் இரசூல்
தவறாம் இருவரைச் சாற்றக்கேளீர்

511. வெறுப்பாம் இருவரும் கொலைகள்செய்யும்
வேண்டா மனிதரும் இவர்கள் பாவம்
குறிப்பாய் பொறுக்கப்படாது எனவே
கொழுந்து நறைவீச எழுந்தோர் சொன்னார்

512. வரிசை நபியுல்லாஹ் அபூதர்ருக்கு
வாகாய் வஸியத்துச் செய்தது கேள்
பிரிசமுடன் பார்த்து நடந்துக் கொள்வாய்
பிரியும் பூமியில் எளியார் தம்மை

513. கருதா மனங்கொண்டு சீமான்களை
கண்ணால் தெரிசித்து பார்க்க வேண்டாம்
அரியோன் தனக்காக மிஸ்கீன்களை
அகத்தால் உவந்து நீ முடுகுவாயே

514. இனத்தோடு உறவாடி இருந்து கொள்வாய்
ஏக பெரியவன் காரியத்தில்
கனத்த வடுவான பழிப்புகளை
கல்பால் பயப்பட வேணும் என்றார்

515. வல்லபீஸபீல் தனில் மரித்தோர்
மருவும் வஸியத்து மறந்திருந்தால்
தொல்லை நரகத்திலாவார் என
துய்ய நபியுல்லாஹ் தொகுத்துரைத்தார்

516. அடியார்களை நல்லபடியாளாமல்
அநியாயமாக ஆண்டவர்கள்
படியாம் சுவர்க்கத்தில் புகுதார் என
பயகொம்பர் ஆலநபி ஓதினார்

517. எம்மாத்திரம் குற்றம் தினங்கள் தோறும்
எங்கள் அடியார்க்கு பொறுப்போமென
சும்மா வுரைபேசார் தமை கேட்டபின்
சொன்னார் எழுபது குற்றமென்றே

518. உங்களடியார்கள் தொழுது கொண்டால்
உகப்பாம் உடற்பிறப்பாகு மென்று
திங்கள் முஹம்மது சொன்னார் என
சித்தீக் அபூபக்கர் செப்பலுற்றார்

519. கைக்கீழ் அகப்பட்ட உடற் பிறப்பை
கனமாய் நடத்துங்கோள் பிள்ளைபோலென்று
எக்காம் உரைபேசா நபி இரசூல்
இனியமணி வாயால் எடுத்தோதினார்

520. ஏலும்படி வேலை நீங்கள் கொண்டு
ஏலா அமலிலும் ஒத்தாசைகள்
கோலம் பெறச்செய்து இருப்பீர் என
கோமான் தனைக் கண்ட சீமான்சொன்னார்

521. உங்கள் உடையிலும் அன்னத்திலும்
உகப்பாம் குடிப்பிலும் சரியாகவே
சங்கையுடன் நன்றாய் நடத்துமென
தம்பிரான் நபி சாற்றினாரே

522. கையாட்சியான உயிர் வஸ்துவை
கருதி கருத்தாகப் பேணி நன்றி
ஐயமறச் செய்து இருங்கோ வென
அழகாய் மவ்த்தாம் போதருளிச்செய்தார்

523. உங்கள் தனக்கொற்று வராதிருந்தால்
உடையோன் படைப்பை வேதனைகள்செய்யாய்

சங்கையாய் விற்றுக்கொள்வாய் என
தம்பிரான் நபி சாற்றினரே

524. ரத்தம் தசை என்பு தாய் தகப்பன்
நெறியாகச் சரியானோர்களை
கத்தியடித்திட சரியல்லவே
கருத்தாகப் பேணிக் கொள்வீர்களே

525. நெர்க்கமணுகாமல் அடியார்களை
நெறிகேடணுகியே மிகவேதனை
ஹக்கன்றி செய்தோர் மக்கநபி
கருணை ஷபாஅத்தை எற்றார்களே

526. அநியாயமாக ஒரு மு.ஃ.மினை
ஆகாக் கொலையாகக் கொல்வதிலும்
துனியா அடங்கலும் நீங்கிறது
துய்யோனிடத்தில் லேசாகும் என்றார்

527. வானோர் அடங்கலும் புவியோர்களும்
வாகாய் ஒரு மு.ஃ.மின் சோரைதன்னில்
ஈனமறக்கூட்டாய் இருந்தோர்கள் தான்
எரியும் நரகத்தில் வீழ்வார் என்றார்

528. முடியும் கியாமத்தில் முதற் கேள்வியாய்
மோசம் அணுகாதான் கேட்குமது
கொடுமையுள கொலைக் கருமமென
குருவாம் முஹம்மது நபி கூறினார்

529. வார்த்தை விசுவாசம் தன்னை நம்பி
வந்தோர்தமை கொலைசெய்தோர்கள்தான்
ஏற்றமுள சொர்க்கவாடை தனை
எட்டார் எனச் சொன்னார் எம் இரசூல்

530. வாளாலிரு முஸ்லிம் எதிர்த்தால்
வம்பாய்க் கொலைசெய்தோனும் பட்டோனும்
தாளாது எரிகின்ற நரகம் தன்னில்
தாழ்வாரெனச் சொன்னார் சங்கை நபி

531. கொலைபாதகம் செய்தோன் கருமமிது
கொலையில்இறநதவன் கருமம் ஏது என்று
அலையா நபி தம்மை கேட்டளவில்
அருளினார் அவன் முந்தாவிட்டால்

532. பெலமாக இவன் தனைக் கொல்லவே
பிரிசமனம் வைத்து இருப்பானென்று
கலையாம் அறிவுள்ள இமாம் நஸஈ
கனத்த கிதாபினில் எடுத்தோதினார்

533. எந்த வகை கொண்டும் தம்மை கொலை
இம்மைதனிற் செய்தோர் தம்மை நாளை
அந்த வகைக் கொண்டு அரிய நாயன்
அதாபு படுத்துவான் நரகில் என்றார்

534. தன்னைக் கொலை செய்து செத்தவர்மேல்
சங்கை நபி தொழ மறுத்தார் என
சன்னவுரை பேசா இப்னுஹிப்பான்
சங்கை கிதாபினில் உரைக்கலுற்றார்

535. வருத்தம் தனக்காக ரோசத்துக்காய்
வம்பாகத்தன்னை கொலை செய்பவர்
பெருத்த நரகத்தில் ஊழிகாலம்
பெரியோன் அருள்படி கிடப்பார் என்றார்

536. தன்னைக் கொலை செய்ய ஆகுமென்ன
சாற்று வோர் ஆதிவேதத்திற்கு
உன்னி யகீன் கொள்ளாக் காபிரென்று
உலமா அடங்கலும் உரைத்தார்களே

537. நான்று மவ்த்தானோர் குத்திக்கொண்டோர்
நாக்குப்பிடுங்கினோர் தீக்குழித்தோர்
ஈண்டு வகைகொண்டு இறந்தோரெல்லாம்
எரியும் நரகுக்கு இரையாவாரே

538. ஹக்கன்றி முஸ்லிம்கள் தம்மை
கருதிஅடித்தோர்கள் தங்கள் மேலே
ஷக்கன்றி ஆதிமுனிவான் என
சங்கை அபூஉமாமத் உரைத்தார்

539. ஒருவன் ஒருவனை அச்சமாக்க
ஒண்ணாது ஹறாமாம் எனவே
குருவாயுதிப்பான நபி இரசூல்
கூண்ட களரியில் கூறலுற்றார்

540. உடப்பாம் முஸ்லிம்கள் தன்னளவில்
உரத்த இரும்பதை நீட்டினார் மேல்
கடப்பாய்க் ககனுள்ளோர் முனிவார் என
கடல்போல் கொடையுள்ள நபி ஓதினார்

541. அச்சப்படுத்தினோர் மு.ஃ.மீன்களை
அவர்கள் தனை ஆதி கியாமத்துநாள்
கொச்சைப்படுத்துவான் என உரைத்தார்
கோஜா முஹம்மது நபி இரசூல்

542. சூனியம் பில்லி மாய்கை அமல்
தீங்காய்ப் படிப்பதும் செய்கிறதும்

ஈனமுள பெரும் பாவமென
எங்கள் முஹம்மது நபி ஓதினார்

543. வள்ளல் அபூஹனிபா மாலிக்கும்
வரிசையுள இமாம் ஹன்பலியும்
தள்ளுண்ணும் காபிராவார் என
சங்கை கிதாபினில் உரைத்தார்களே

544. சூனியம் செய்வோர்கள் தம்மை
சுறுதியாய்க் கொல்லுங்கோ எனவே
மானும் புலியுமாய் ஒரு தலத்தில்
வாழப்பபதி ஆளும் உமறு சொன்னார்

545. வரிசையுள உமர் மகள் ஹப்ஸா
வஞ்சனை செய்த அடியாள் தன்னை
கருவிதனைக்கொண்டு வதைக்கச்சொன்னார்
கருதி ஒருவீச்சாய் வதைத்தார்களே

546. எழுதி புதைப்போரும் முடிவோர்களும்
இதுபோல் வகையான கருமம் செய்வோர்
பழி சேரணுகிய சூனியத்தில்
பாங்காய் அகப்படும் பாவிகளே

547. ஏதாகிலும் தன்மேல் கட்டிக்கொண்டால்
இறையோன் அவன் பக்கல் சாட்டிவிப்பன்
நாதன்களா என்று விசுவாசித்தால்
நல்ல அரணான பிலமாகுமே

548. மார்க்க நெறி அறியாதோர் பக்கல்
வாங்கி குழிகைகள் கட்டுவோரும்
பேய்க்கென்று ஒரு வஸ்து கழிப்போர்களும்
பிரிசம் அணுகாத காபிர் என்றார்

549. மார்க்க நெறி யில்லாக் கருமங்களை
வருடிவிரும்பினோர் பொருத்தமானோர்
தீக்கீழ்கிடந்து வேவார் எனவே
சிறப்பாம் உலமாக்கள் செப்பினரே

550. வசைகேடு கொண்ட பேர்களுக்கு
வண்மையுடன் ஓதிப்பார்க்க என்றால்
பிசகில்லா தீனின் காரியத்தால்
பிரிசமுடன் ஓதி பார்க்க என்றார்

551. தலைமைக் கிருப்போரை கியாமத்துநாள்
தழல் சங்கிலிகொண்டு பூட்டப்படும்
பிலமாம் நெறிவந்து தானுடைக்கும்
பிரிந்தால் நெறிதீயில் வீழ்வார் என்றார்

552. தோழர் அபூதர்றுக்கு உரைத்தார் நபி
துனியாத் துரங்களை தேடாயென்றார்
ஏழை எதீம்கள்தன் முதலைவாங்கி
இகலி கியானத்துச் செய்யா என்றார்

553. தலைமைக்கிருப்போர்க்கும்குறிசொல்வோர்க்
தண்மை அமானம் கையாடுவோர்க்கும்
அலமாம் விதனங்கள் மிகுந்திருக்கும்
அழலாம் வைல் எரிவிதியாம் என்றார்

554. அறுபது ஆண்டாய் பாவம்செய்து
அல்லும் பகலுமாய் இருப்பதிலும்
குறிகேடணுகாத ஓர் ஸாஅத்தில்
குணமாய் நெறிபேசி இருப்பது என்றார்

555. தொண்ணூறு பீஸபீல் தனிலும்
துலங்கும் ஒரு பேச்சு நெறியாகவே
அல்லல் அணுகாத நியாயமாக
அழகாய் உரைப்பது ஏற்றம் என்றார்

556. ஆதிதனக்கு உகப்பான பேர்கள்
அத்லாய் நடத்தின அரசர் என்றும்
நீதி நபி உரைத்தார் எனவே
நெறிசேர் தப்ரானி நிகழ்த்தினாரே

557. அநியாயம் செய்யும் காழி தன்னை
அகல்வான் பெரியவன் அஜாஜீல்என்போன்
இனிதாய் அவனைச் சேர்ந்திருப்பான் என
ரஹ்மத்தாய் வந்த நபி ஓதினார்

558. வானம் தனிலுள்ள துறைய்யாவுடன்
வம்பன் தனைத் தூக்கிக் கட்டவிழ்த்து
ஈனமணுகிய புவியில் வீழ
இனிதாய் மனது வைத்திருப்பதென்றார்

559. அநியாயமான தலைமைக்காரர்
அழகாம் சுவர்க்கத்தின் வாடைதன்னை
இனிதாய் பெறமாட்டார் என உரைத்தார்
இலங்கு முஹம்மது நபி இரசூல்

560. அரசாய் புவி ஆண்டோர் கியாமத்துநாள்
அழலாம் நரகத்தில் எழுபதாண்டாய்
பிரியாச் சுரிவோடு வானெனவே
பெருமான் முஹம்மது நபி ஓதினார்

561. கடிந்த அதாபுள்ளோர் கியாமத்துநாள்
கருணை அணுகாமல் தலைமைசெய்வோர்

கொடிய அரசர்கள் என உரைத்தார்
கொடையால் அழகானநபி இரசூல்

562. அநியாயம் செய்ய துரமெடுத்தோர்
அவர்கள் ஷஹாதத் கலிமா தன்னை
முனிவாய் பெரியவன் கூட்டான் என
மொழிந்தார் முஹம்மது நபி இரசூல்

563. வழிகேடணுகிய தலைமைக்காரர்
வணக்கம் தனை ஆதிகூட்டான் என
எளிய மிஸ்கீன்கள் மேலுவப்பாய்
இருக்கும் முஹம்மது நபி ஓதினார்

564. ஓர் ஸாஅத்தில் நெறியாய் நடத்தல்
உகப்பாம் அறுபது ஆண்டு தவம்
சீராயிருப்பதில் ஏற்றமென
சீமான் முஹம்மது நபி ஓதினார்

565. வம்பாம் அநியாயம் கியாமத்துநாள்
வளையும் இருளாக இவனை என்று
துன்பம் அணுகாத நபி இரசூல்
தொகுத்தார் எனச் சொன்னார் இப்னுஉமர்

566. வம்பில் அகப்பட்டோர் துஆஇரப்பை
வல்லோன் கபூலாக்குவான் எனவே
இன்பமணி வாயால்நபி சொன்னார் என
எங்கள் அஹ்மது இமாம் உரைத்தார்

567. என்னைத் தவிர ஒத்தாசை இல்லா
எளியார்தனை ஆகாஅநியாயங்கள்
உன்னி உரமாக செய்வோர்கள் மேல்
ஓங்கிவரும் எந்தன் அதாபு எனவே

568. வன்னிசுவர்க்கம் வான்புவி படைத்த
வல்லோன் உறுதியாய்ச் சொன்னான் என
மன்னர் முஹம்மது நபி இரசூல்
வாழும் மனிதரோடு உரைத்தனரே

569. அரசர் தலைவாசல் அடுக்குமட்டும்
ஆதி ரஹுமத்தின் வாசல்விட்டு
பிரிவா அகன்று போவார் எனவே
பேரால் அழகான நபி மொழிந்தார்

570. மன்னர் தலைவாசல் ஏகுவோர்கள்
வலியபித்னாவில் ஆவார் என
கன்னல் மதுரம் போல் மொழிகள் செப்பும்
கண்ணின் மணியான ஹபிப் ஓதினார்

571. ஆகா அரசர்தம் அதம்பத்துக்கு
ஆராகிலும் ஒத்தாசை உதவி
வாகுபெறச் செய்தால் என் ஹவ்ழினில்
வாரார் எனச் சொன்னார் நபி இரசூல்

572. இல்லாப் படுபேச்சை உரைப்பவர்க்கு
எரியும் நரகத்தின் கபாலம் தன்னை
அல்லாஹ் புகட்டுவான் என உரைத்தார்
அண்டம் அடங்கலும் சென்ற நபி

573. ஆதிவிதித்த ஹத்தானவையை
அகற்றி ஷபாஅத்துச் செய்வோர்கள் தான்
நீதி எனும் நாயனுடன் பிணங்கி
நெருங்கிப் பகைத்தவனாகும் என்றார்

574. ஹக்கன்றி வழக்குரைப்பாருக்கு
கருத்தாயுதவி ஒத்தாசை செய்தோர்
சக்காம் பிசகன்றி இறை கோபத்தின்
தண்மையணுகியே இருப்பார் என்றார்

575. சங்கையுள முஸ்லிம்கள் தம்மை
தண்மைப் படுத்தி நோக்காடு செய்தோர்
பங்கமிகவுள்ள முனாபிக் என்றே
பகர்ந்தார் முஹம்மது நபி இரசூல்

576. உண்மை முஸ்லிம்கள் தங்களுக்கு
உதவியாதொரு வருத்தம் தீர்த்தால்
தண்மைஅணுகாதான் கியாமத்துநாள்
ஸப்யீன் வருத்தத்தைத் தீர்ப்பான் என்றார்

577. முஸ்லிம்கருமத்தில் முயன்றோர்கட்கு
முப்பதுடன் நாலு பத்தாயிரம்
குஷியாய் இறைவனை வணக்கஞ்செய்யும்
குடிலோர் துஆத்தேடி நிற்பார் என்றார்

578. உடப்பாம் முஸ்லிம்கள் குற்றம் தன்னை
உலகர் தனை விட்டும் மறைப்பான் ஆகில்
கடப்பாம் பிழையெல்லாம் இவனுக்கு ஆதி
கனமாம் மஹ்ஷரில் மறைப்பான் என்றார்

579. தீங்குதனைக் கண்ட ஹுஸாலுடனே
செப்பினார் நபி மாங்கிசம் நீர்
பாங்காயுடுத்த உன்னாடை கொண்டு
பரிவாய் மறைத்தாக்கால் கைராம் என்றார்

580. ஈனமிகவுள்ள ஜினாத்தனக்கு
இயல்பாய் முடுகவேண்டாமெனவே

வானேழ் அமைத்தவன் குர்ஆன் ஆயத்தில்
வரிசைநபி தமக்குரைக்கலுற்றான்

581. ஆகாஜினா தனைப் பொருந்திச் செய்தோர்
அழகான மு.ஃ.மினல்லவென
ஏக முஹம்மது சொன்னார் என
இயம்பினார் திர்மிதீ நஸாஈ

582. ஆராகிலும் ஜினாச் செய்தால் அவன்
அழகான ஈமான் அவனை விட்டு
சீராய்க் கழலும் சட்டை போலென
தீங்கில்லா நபி திறந்தோதினார்

583. வண்மை அணுகாத ஜினாச் செய்தோர்தன்
வரிசையுள்ள ஈமான் கழன்றவன் மேல்
வெண்மைக் குடைபோலாய் நிற்கும் அவன்
மீண்டால் தவ்பத்தால் மீழும் என்றார்

584. தீங்காய் ஜினாச்செய்தோர்முகம்நெருப்பாய்
தீரும் மஹ்ஷரில் எரியுமென்று
பாங்கரொடு பேசியுரைத்தார் எங்கள்
படையார்க் கிளையாத நபி இரசூல்

585. பொல்லா ஜினாவான கருமத்திற்கு
போதற் பயப்படுவே னுங்கள் மேல்
அல்லாஹ் தனை அஞ்சி ஜினாச்செயலை
அகல்வீர் எனச் சொன்னார் ஆலநபி

586. வரிசை மிகவுள்ள ஷ.ஃ.பான் பாதி
வண்மையிரவையில் இரப்போர் துஆ
பெரியோன் கபூல்செய்வான் ஜினாச்செயலால்
பிழைக்கும் மடந்தையர் ஆயக்காரர்

587. கருதியிரக்கின்ற துஆவை ஆதி
கைக்கொள்ளான் என்றார் காவல் நபி
பரிசுபெற உரைத்தார் எனவே
பார இமாம் ஹன்பலீ உரைத்தார்

588. தன்னூ றடுப்புப் போலொரு பொதும்பில்
தணலா எரிந்திட அதில் சில பேர்
வன்னி உயரும் போதுயர்கின்றார்கள்
வாகா ஒடுங்கும் போது ஒடுங்குகின்றார்கள்

589. என்னை அழைத்து வந்தோர் உடனே
இயம்பினேன் இவர் யார் என
மன்னர் ஜப்ரயீல் உரைத்தார் இவர்
வடுவாம் ஜினாச்செய்த பெண் ஆண்என்றே

590. நிகாஹு செய்து ஜினாச் செய்த பேரை
நீதி இஸ்லாமை விட்டோர்களை
ஹக்காய் கொலை செய்ய ஆம் எனவே
ககனேறி மீளவந்தோர் சொன்னார்

591. அறுபது ஆண்டாய் இரவு பகல்
அமலாய்த் தொழுததும் ஒரு ஜினாவும்
நிறையால் நிறுத்தபின் ஜினாவின் குற்றம்
நிலத்தில் பணிந்தது என்றார் இரசூல்

592. வண்மை அணுகாத ஜினாச்செயல்மேல்
வாகாய்த் தரிப்பாக இருக்கின்றவன்
தண்மை அணுகிய புத்துகானை
சாத்தி வணங்கினோன் போலாம் என்றார்

593. முனிவாம் ஜினாவுக்கும் பொருத்தமாகும்
மோசம் அணுகிய சைத்தானுக்கு
சனியாம் இப்லீசு மிகவுகப்பாய்
தாஜு முடிதனை கொடுப்பான் என்றார்

594. தண்மை மிகவுள்ள ஜினாச் செயலை
தகுமாய்ப் பயந்தஞ்சி விட்டோர்கள் தான்
உண்மைப் பெரியவன் அர்ஷின் கீழே
உருகும் கியாமத்தில் ஆவார் என்றார்

595. ஈனமுள்ள ஜினா தன்னை விட்டு
எவராகிலும் பேணியிருந்தாராகில்
ஜீனத்துள்ள சொர்க்கம் அவர்க்குண்டென
செருப்போடு அர்ஷேறி வந்தோர் சொன்னார்

596. சங்கைநபி சொன்னார் மஹ்ஷரிலே
தண்மையுள பெரும் நாற்றமுண்டாம்
பங்கமுள நாற்றமேது எனவே
பகர்வார் படைப்புகள் தொனியுண்டாகும்

597. முங்கி ஜினாவிலே தரிப்பாகவே
மோசம் அணுகிய பேர்களுடல்
லிங்கம் தனிலுள்ள நாற்றம் என்றே
இடிபோல் தொனிவரும் முனிவாகவே

598. இரண்டு அலகுக்கும் இருதாளுக்கும்
இடையில் உறுப்பு ரண்டையும் பேணினால்
வென்றியுள சொர்க்கப் பிணை யான் என
வெளிமானுடன் பேசி நின்றோர் சொன்னார்

599. மூன்றுமுறை நபி ல.்.னத்திட்டார்
முறைகேடு அணுகிய பின்புறத்தில்

வேண்டாச்செயல் செய்யும் பேரை என்று
வேதவுரை பேசும் நஸயீ சொன்னார்

600. பின்னிலடுத்திடக் கண்டீர்களேல்
பிரியாதிருவரைக் கொல்வீரென்று
மன்னர் நபி சொன்னார் என உரைத்தார்
வரிசை இமாம் அபூதாவூத் என்போர்

601. ஏறும் இருவர் ஆண் பெண் ஆகிலும்
இந்தச் செயல்விட்டுத் தவிர்ந்தில்லையேல்
வீறாம் ஷஹாதத்துக் கலிமாதனை
மேலோன் கபூலாக்கான் என ஓதினார்

602. ஆதிபெரியவன் முனிவாகவே
ஆகாத் துவாரத்தில் அடுத்தோர்களை
நீதமுடன் நோக்கான் என உரைத்தார்
நெறியாம் முஹம்மது நபி இரசூல்

603. புத்திதனை போக்கும் வஸ்துக்களும்
பொல்லா மயக்கம் உண்டாக்குவையும்
வெற்றி அணுகாத ஹராம் எனவே
விசும்பு கவிகையாய் வந்தோர் சொன்னார்

604. போதம் கெடுக்கின்ற கள் குடித்தால்
போற்றலுள ஈமான் கழலும் என
நாதர் முஹம்மது உரைத்தார் என
நலவான இமாம் ஹாக்கிம் சொன்னார்

605. கள்ளு நிலைப்படக் குடித்தவனும்
கருணையுள பந்தை முறிப்பவனும்
தெள்ளிதாய் சொர்க்கம் புகுதார் என
ஜீனத்தழகான நபி ஓதினார்

606. நாற்றமிகவுள்ள கள் குடித்தோர்
நாளை கியாமத்தில் விடாயாகவே
நாற்றம் அணுகியே வருவார் என
நபிமார்க்கு அரசரான நபி ஓதினார்

607. நாற்பது நாளாய்ச் செய்த தவம்
நாயன் கபூலாக்கான் கள்ளொருக்கால்
கூர்ப்பாய் அருந்தினோர்க்கு என்று நபி
கூறினார் கூண்ட களரியிலே

608. கள்ளுக்குடித்தபின் மவ்த்து வந்தால்
காபிராய்ச் சாவான் என ஹதீதில்
தெள்ளிதாய் வந்து இருக்குது என
ஷெய்கு அஹ்மது செப்பினாரே

609. ஆகாப் பெரும்பாவம் அடங்கலுக்கும்
அமளிப் பெரும்பாவம் கள் குடியென்று
ஏகன் நபி செப்பினார் எனவே
ஏற்றமுள இப்ன் அமீர் உரைத்தார்

610. ஏட்டில் அடங்காத பித்னாவுள்ள
இப்லீசு சிறு நீரினாலே
கூட்டி எழுந்த பொல்லா இலையை
கூட்டாதே என்றார் கோமான் நபி

611. கஞ்சா அப்யூன் அம்பர் மா.ீ.ஜூன்
கனதி கெடுக்கின் றமது ஊமத்து
பொஞ்சா ஹராம் என்று உரைத்தார்எங்கள்
புவியில் உலமாவில் பெரியோர்களே

612. புகையிலை தன்னில் உள்ள பித்னா
புகலில் அரிதாகும் கெடும்புக் கெல்லாம்
முகமாயிருக்கும் பொல்லா இலையை
முயன்று விரும்பினோர் சைத்தான்களே

613. ஹராம் என்றுஅறிந்துபின் குடிப்போர் தின்போர்
கருத்தாய் பயிர்செய்வோர் கொண்டுவிற்போர்
குர்ஆனின் படி ஈமான் கொள்ளார் என
குறித்த உலமாக்கள் கூறினரே

614. கொள்ளி சைத்தான்கள் போலாகவே
குறிகேடுள புகையிலை குடித்தோர்
பள்ளிதனில் வரவிலக்காம் என
பகர்ந்தார் உலமாக்கள் பரிவாகவே

615. தூளாய் பொடியாக்கி நாசிலேற்ற
தூய்மை அணுகாத ஹராம் எனவே
தோழாமை செய்ய இணக்கமான
துய்ய உலமாக்கள் தொகுத்துரைத்தார்

616. குர்றா எனும் ஓதியானோர்களில்
குறிகேடணுகிய சில பேர்கள்தான்
ஷர்ராம் இலை குடிப்போர் தின்பார்கள்
ஷைத்தான்தனிற் கெட்ட ஷைத்தான்களே

617. அறுதி மாறுதல் பொய்சொல்லுதல்
ஆகாச்சதிமானம் செய்குதலும்
குறிகேடு அணுகிய முனாபிக்குதன்
குணமாம் இவை என்று நபி கூறினார்

618. தெளிவாக ஈமான் கொண்டானில்லை
தீங்கான தர்க்கம் மனோலம் பொய்யை

மொழியாமல் விட்டால் ஒழிய என்றார்
முன்னாள் மயில் வேஷமாய்த் துதித்தோர்

619. வாகாய் எக்கீன் ஈமான் கொண்ட மு.ஃ.மின்
வண்மை அணுகாப் பொய்யுரையான் என
காஹா நகர்தனில் நாகம்தன்னை
கருவிதனைக் கொண்டு அரிந்தோர்சொன்னார்

620. குழந்தைதனைப் பார்த்து வா உனக்கு
குணமாய் ஒரு வஸ்து தருவேன் என்றால்
மொழிந்து கேட்டு வந்தளவில்
முயன்று கொடாவிட்டால் பொய்யாம் என்றார்

621. சிரிப்பு வருத்தவே பொய்யுரைகள்
தீங்காகப்பேசும் தோஷியர்க்கு
எரிப்பு மிகவுள்ள வைல் நரகம்
எதிர்க்கும் எனச் சொன்னார் எங்கள் நபி

622. அமளி தனக்காக பொய் சொல்லுதல்
ஆகுமெனச் சொன்னார் உலமாக்கள்தான்
சமதமணுகாத பொய்யுரையை
தரணிதனிலுள்ளோர் தவிர்ந்து கொள்வீர்

623. பொய்யான ஆணை சத்தியங்கள்
புகன்று ஒருதன் ஹக்கை எடுத்தால்
மெய்யாம் உயர்சொர்க்கம்ஹராமாம் என்று
விதியாம் நரகென்றும் இரசூல் சொன்னார்

624. ஷஹாதத்தெனும் சாக்கிதனை மறைத்தோர்
சங்கை அணுகாத பொய்ச்சாக்கிகள்
அகாவி யுரைத்தோர்கள் போலாம் என
அருக்கன் தனைமீள அழைத்தோர்சொன்னார்

625. பொய்யான சாக்கி செப்புவது
பொருந்தாத இணைக்கெதிராகுமென
கையால் ஒருபிடி மண்ணெடுத்து
கனமாம் படைதனில் எறிந்தோர் சொன்னார்

626. வல்லவொரு ஊரில் கொள்ளை நோவு
வல்லானருட்படி வந்த தென்றால்
கொல்லுமிது வென்று ஓடினோர்கள்
குப்பார் படைபயந்தோடி என்றார்

627. ஊரால் ஒரு ஊரில் கொள்ளை நோவு
உளதேல் அதில் போகவேண்டாம் என்று
சீராயதிலிருந்தால் பிரிய
சீரல்ல வென்றார் நபி இரசூல்

628. கொள்ளை நோவுக்கு ஸப்ரு செய்து
குடியாயிருந்து இறந்தோர்களுக்கு
தெள்ளிதாய் பீஸபீலின் கூலி
சீராய் கிடைக்கும் என்றார் இரசூல்

629. நன்மைதனை ஏவி தீங்கை நீக்கி
நலமாயிரான் நம்மில் இல்லை என
தின்மை அணுகாத நபிஇரசூல்
செல்வமணி வாயால் செப்பினரே

630. தீங்குதனைக் கண்டால் நீங்கள் கையால்
திறமாய் விலக்குங்கோ அதுக்குப் பலம்
பாங்காயிராவிட்டால் வாயினாலே
பரிவாய் விலக்குங்கோ அதுதனக்கும்

631. தாங்கும் பெலமில்லாது இருக்கில் கல்பில்
சந்தோஷமில்லாமல் விலகி
நீங்கி அவடம் விட்டு எழுங்கோ என
நெறிசேர் முஹம்மது நபி ஓதினார்

632. மனிதர்தமை ஏவி நன்மை கொண்டு
வாகாய் மறந்தவர் தமக்குவமை
கனமாய் எரிகின்ற தீப்போலென்ன
கையின் துரும்புவாளானோர் சொன்னார்

633. நாவினால் ஏவி விலக்கல் செய்து
நன்றாய் நடவாத மாந்தர்களை
தாவி எரிந்திடும் நரகம் தன்னில்
தள்ளப்படும் என்றார் நபி இரசூல்

634. அவன்தன் வயிற்றில் உண்டாங்குடல்கள்
ஆகாப் பெருநாற்றமாய் வெளியாம்
கவிழ்ந்த குடலைக்கொண்டவன் சுற்றுவான்
கத்தவஞ் செக்கில் சுற்றுமாப்போல்

635. எவரும் அவன் பக்கல் வந்து கேட்பார்
இந்த அதாபு ஏது உனக்கெனவே
கவல்வான் அவன் எந்தன் அறிவின் படி
கருத்தால் நடவாதபடியால் என்பான்

636. விலக்காம் செயல்களில் மிகவிலக்காம்
பீவிமார் வெளியில் போகுதல்
பலக்கேழ் அமைத்தவன் முனிவாகவே
பார்ப்பான் இவைக்குஅஞ்சி நடந்துகொள்வீர்

637. நெருப்பால் படையுண்ட கத்தரியால்
நீழும் உதட்டைக் கத்தரிக்கக் கண்டு

விருப்பமுள ஜிப்ரீலைக் கேட்டேன்
விளம்பினார் சொல்லிச் செய்யார் என்றே

638. தந்தைதனைக் கொண்டு ரூபம் கொண்டும்
சத்தியம் செய்ய வேண்டாம் என
அந்தமுள நபி சொன்னார் என்று
அழகான இமாம் முஸ்லிம் சொன்னார்

639. ஆதிதனையன்றி ஆணையிட்டால்
ஆகாக் குபிர் இணை ஆகுமென
நீதி நபி உரைத்தார் எனவே
நெறியாம் இப்ன் உமர் உரைக்கலுற்றார்

640. இன்ன கருமம் செய்யாதிருக்கில்
யஹூதி நஸ்ரானியான் எனவே
சொன்னான் அதின்படி செய்திலையேல்
தொகுத்தார் நபி அவன் நஸாரா என்றே

641. இருவர்க்கு இடையிலே காழியாக
எவரையாகிலும் வைக்கப்பட்டால்
கருவி எனும் கத்திதன்னை அன்றி
கழுத்தை அறுக்கப்பட்டவனாம் என்றார்

642. கண்ட வழக்குகள் கேட்குகின்ற
ஹாக்கிமார் முவ்வர் உண்டதிலே
நன்றியுள சொர்க்கம் தனில் ஒருவர்
நாறுதனில் இருவர் புகுவார்

643. பிணக்கன்றி இருபேர் நரகம்
பேணும் அறிவின்றி வழக்குத் தீர்ப்போர்
மணக்கும் அறிவுண்டா இருக்கையிலே

வடுவாம் செயல்கள்கொண்டுஹுக்ம்கள்
செய்வோர்

644. இணக்கமுள சொர்க்கம் புகுதும் காழி
இல்மின்படியே தான் என உரைத்தார்
கணக்கு வழக்குகள் தனில்கைக்கூலி
கருத்தாக வாங்குவது ஹராமென்று

645. இணக்கமுள்ள இப்னு மஸ்வூத் என்போர்
இயம்பினார் என்றார் தப்ரானியார்
வணக்கமுள மு.'.மினானோர்கள் தான்
வடுவாம் கையிடை வாங்கார் என்றார்

646. ராகம்தனைச் சுகமாகக் கேட்கும்
நாயான மாந்தர் பாவங்களை
நரகம் அமைத்தவன் பொறான் எனவே
நல்ல முஹம்மது நபி ஓதினார்

647. சுழி கம்படிப்போர்கள் கின்னரங்கள்
கடிந்த ஹராமான நாகசின்னம்
தெளிவாய் உகப்பாக கேட்டிருப்போர்
ஷைத்தான் பயலான ஷைத்தான்களே

648. வரிசையுள இமாம் கஜ்ஜாலியார்
வாகா உரைக்கலுற்றார் வீணையை
பிரிசமுடன் கேட்க ஹராமாம் என்றும்
பெருத்த பெரும்பாவம் இவையே என்றார்

649. உகப்பாம் மனிதர் காலங் கூடினால்
உடையோன் களா என்று பொறுத்தோருக்கு
பகைப்பிலா சொர்க்கம் அன்றிக் கூலி
படைத்தோனிடத்திலே இல்லை என்றார்

650. ஏமப்பதி சொர்க்கம் எளிய பேர்கள்
இம்மைதனில் சீமான் தனக்குமந்த
ஆமெனு மாண்டஞ்ஞூறுக்கு முன்
அழகாய்ப் புகுதுவார் என்றார் நபி

651. மிஸ்கீனாய் என்னை ஹயாத்தாய் வைத்து
மிஸ்கீனாய் என்னை மவ்த்தாக்கு நீ
மிஸ்கீன் கூட்டத்தில் எழுப்பெனவே
விரும்பி நபி இரப்பார் இறைபால்

652. வம்பாம் சரீரத்தை அடக்கியாண்டு
மவ்த்தின் பிறகுண்டாம் கருமத்திற்கு
இன்பமுடன் அமல் செய்வோர்கள்தான்
இம்மைதனில் புத்தியுள்ளோர் என்றார்

653. சரீரம் தனக் கொற்றார்போல் நடந்து
தம்பிரான் பக்கல் நாட்டம் வைப்போர்
அரியோனிடத்திலே பாவியென்ன
அருளினார் எங்கள் ஆலநபி

654. பூமி நிரம்பின சீமானிலும்
புவியிலொரு ப(க்)கீர் ஏற்றமென்று
ஆமினார் மகன் சொன்னார் என்று
ஆன ஸஹ்லுபின் ஸஹ்லு சொன்னார்

655. அழகாம் சுவர்க்கத்தை எட்டிப்பார்த்தேன்
அதிலுண்டாம் பேர்கள் அடங்கலுமே
எளிய மிஸ்கீனாய்க் கண்டேனென்ன
ஏந்தல் முஹம்மதுநபி ஓதினார்

656. உகந்தோருடன் கூடுங்கோ எனவே
உண்மை நபியுல்லாஹ் சொன்னார் என
பகர்ந்தாரவர் மூஸா என நவின்றார்
பார இமாம் முஸ்லிம் புகாரி

657. சிநேகரெனும் தோழமார்கள் தம்மை
சீராய் உகந்தோரை நாளை ஆதி
அநீதியமன்றி எழுப்புவான் என்று
அஹ்மது நபி அருளிச்செய்தார்

658. வேண்டாக் கருமங்கள் தன்னைவிட்டால்
மேலான தீனுக்கு அழகாம் என
தூண்டா விளக்கான நபி இரசூல்
சொன்னார் எனத் திர்மிதி பேசினார்

659. அகமாம் எனும் கல்பு திருத்தமானால்
அங்கம் அடங்கலும் திருந்துமென
அஹ்மதி ரசூல் சொன்னார் எனவே
அஸ்ஹாபி இக்ரிமா உரைத்தார்

660. தின்மைக் கடுத்தாற்போல் நன்மைசெய்தால்
தீங்காக வந்ததின்மை தன்னை
நன்மை அழிக்கும் என்று உரைத்தார் என
நலவு மிகவுள்ள மஆது சொன்னார்

661. ஹஸனாத் எனும் நன்மை செய்துவந்தால்
கருணை அணுகாத தின்மை தன்னை
பிசகில்லாது அழித்திடுமெனவே
பெருமான்நபி தமக்கிறை ஓதினான்

662. தந்திரமாக நடக்குமது
தகுமாய் நிருவாகப் பாதியென்று

அந்தரமேறி மீண்ட எங்கள்
ஆலநபி சொன்னார் அனஸ் அவர்க்கே

663. ஆரொடும் உகப்பா யிருக்கில்
அக்லெனும் புத்திபாதி என்றும்
தீராச்சலிப்புகள் நரைக்கிழடின்
செம்பாதி என்றும் நபி ஓதினார்

664. அஞ்சுவுயிர் வஸ்தைக் கொல்ல ஆமென்று
அருளினார் நபி பருந்தும் காகம்
நஞ்சான நாகம் பல்லியினம்
நறுக்கும் எலியிவை அஞ்சாகுமே

665. வரிசை முஸ்லிம்கள் தனைத்தங்கடம்
வாகாய் வருத்துவோர் தங்களையும்
கருதியவை தன்னை கண்டபோது
கத்லாமெனச் சொன்னார் உலமாக்களே

666. தொழுகை நெகிழ்ந்தோர்கள் நிகாஹுசெய்து
தோஷமுள ஜினாச்செய்தோர் மார்க்கம்
தெளிவாய்ப் பிரிந்தோரைப் பழிசெய்தோரை
சீராய்க்கொலை செய்ய துரிஸ்தாம் என்றார்

667. எந்தவகையான வஸ்துவையும்
எரியாற் கொலை செய்ய ஹராமெனவே
பந்தம்போல் இந்தப்புவியில் வந்த
பார உலமாக்கள் பகரலுற்றார்

668. தேரை தவளைகள் இதுபோலொற்ற
தீங்கில்லா உயிர்ப் பிராணிகளை
சீராய் கத்ல் செய்ய ஹராமெனவே
சிறப்பாம் உலமாக்கள் செப்பினரே

669. நன்மைப் புதையலாம் ஸதகாதன்னை
நலமாய் மறைப்பது நசல்கள் தன்னை
துன்மையுடன் மறைப்பதுவும் என
சொன்னார் நபி சொன்னம் போலாகவே

670. இம்மைக் கருமத்தில் சலிப்பாகவே
எவரும் விடிந்தாரேல் கியாமத்துநாள்
நன்மையுள நாயன் முனிவுபெற்று
நஜீஸாய் விடுவார் என்றார் இரசூல்

671. சீமான் தனக்காகத் தாட்சி செய்தோர்
செய்யும் அமல்தன்னில் இருபங்குதான்
கோமான் சமுகத்தில் அழியுமென
கூறினார் எங்கள் நபி இரசூல்

672. முழக்கமெனும் இடிதொனியை கேட்டால்
மேலோன்தனை அஞ்சி போற்றல் செய்து
பழக்கம் பறையாமல் இருங்கோ என
பகர்ந்தார் முஹம்மது நபி ஓதினார்

673. இன்னான் உதவியில்லா திருக்கில்
இன்னான் எனைக்கொல்வான் என்று செப்பல்
மன்னான் தனக்கு இணையாகுமென்று
வள்ளல் முஹம்மது நபி ஓதினார்

674. ஆதிதனைநாடி இருங்கோ என்றும்
அர்ஹாம் மனுவைச் சேர்ந்திருங்கோ என்றும்
நீதியுள நபி தொகுத்தார் என
நெறியான அஸ்ஹாபு உரைத்தார்

675. எந்த அமலிலும் ஏற்றமான
இனிய அமலேது என்றிரஸூல் தம்மை
வந்து ஒருத்தனார் கேட்டபோது
வல்லான் தனக்கு ஈமான் கொள்வதென்றார்

676. பிந்தி வரிசை ஏது என்றபோது
பேசினார்நபி குடல்வாய் தன்னை
அந்தமுடன் பேணிக் கொள்வதென்ன
அவனிதனிலுள்ளோர் அறிந்துகொள்வீர்

677. பெந்து மனிதர் பால்நுந்தாள் கொண்டு
விரும்பி நடந்துபின் நலவுநன்றி
அந்தமுடன் செய்யாதிருக்கில் பெந்தை
அவனிதனில் முறித்தோனாம் என்றார்

678. துனியா தனிலிருப்பதுக் குவமை
சொன்னார் நபியுல்லாஹ் மரத்தின்கீழில்
இனிதாய் நிழலுக்கு இருந்துபின்பு
ஏகும் பரிசுபோலாகும் என்றார்

679. கனவுதனில் இன்ப சுகங்கள்கண்டு
களிகூர்ந்து மனம் மிகமகிழ்ந்து
இனிதாய் எழுந்த பின்னொரு வஸ்துவும்
இராத பரிசாகும் துன்யா என்றார்

680. துனியாதனக்கும் ஆகிரம் தனக்கும்
சொன்னார்நபி உவமை விரலை
முனிவாம் கடல்நீருக்குள் புகுத்துப்பின்பு
மோசமற எடுக்கும் போலென்றார்

681. ஓர்நன்மை செய்தால் அதனைப் பத்தாய்
உடையோன் எழுதுவான் ஒரு தீங்கினை

பாரப்புவியில் செய்தால் ஒன்றாக
படைத்தோன் எழுதுவான் என நவின்றார்

682. என்னைக் காணாமல் எனக்கு ஈமான்
இனிதாகக் கொண்ட பேர்களுக்கு
முன்னத்தாய் துஆ உண்டெனவே
மூன்று முறை சொன்னார் நபி இரசூல்

683. கோலம் பெற கத்னாச் செய்குதல்
குளிர்ந்த நறை பல் தேய்ப்பு நிகாஹும்
நாலும் இவை ரஸூல் மாருடைய
நலமான ஸுன்னத்தாகும் என்றார்

684. பாவம் தனைவிட்டு தவ்பாச் செய்தால்
படைத்தோன் கபூலாக்குவான் எனவும்
சாவில்லான் பக்கல் துஆ இரந்தால்
தகுமாம் பிஷாரத்துச் செய்வான் என்றார்

685. சொரியும் கதிரானகீல் குப்பாயம்
தொல்லை மிகுந்திடும் கியாமத்துநாள்
செறிவாய் குரல்விட்டு ஒப்பாரிகள்
செப்புவோர் உடுப்பார்கள் என்றார்

686. ஒப்பாரி சொல்லி அழுவோர் இந்த
உரத்த சொறிச்சட்டை தனை உடுத்தால்
வெப்பமுடன் சொறிவார்கள் எலும்பு
மேனி தசை நீங்கி வெளியா மட்டும்

687. துனியா தனிலுள்ள சொறிச்சலுக்காய்
துயில் நித்திரையன்றி இரவு பகல்
கனமாய்ச் சொறிவார்கள் எந்தப்படி
கடிந்த அதாபுக்குப் பொறுக்கப்போறீர்

688. அன்னம்அளியுங்கோ ஸலாம்சொல்லுங்கோ
அர்ஹாம் மனுவைச் சேர்ந்திருங்கோ இரவில்
மன்னன் தனைத் தொழுங்கோ சுவர்க்கம்
வாகுபெறப் புகுவீர்கள் என்றார்

689. சொர்க்கப்பதி தன்னை நினையுமென்று
தொல்லை நரகத்தை மறவாமலே
ஹக்காய் நினையுங்கோ என உரைத்தார்
களிப்பாய் சிரித்தோர்கள் தங்களுடன்

690. துனியா சுகந்தனை விட்டு நீங்கி
துணியாம் கலையாடை உடுத்திருக்க
இனிய யகீன் ஈமான் தனிலாமென்ன
ஏற்ற அபூஉமாமத் உரைத்தார்

691. பசியாலிரு ஓநாய் கிளையாட்டிலே
பாங்காய் அழிக்கின்ற பரிசதிலும்
குஷியாய் முதல் தேடல் தலைமைதேடல்
குன்றாப்பெரும் தீனைக் கெடுக்கும் என்றார்

692. ஆதி திக்றன்றி மிகுதி பேசல்
அகமாம் எனும் கல்பை அழிக்கும் என்று
ஓதினார் நபி என உரைத்தார்
உண்மையுள இப்னு உமர் என்பவர்

693. கலாமாம் உரையெல்லாம் கேடாய் வீழும்
கனதியுள நன்மை தின்மைகளை
பெலமாக ஏவல் விலக்கலன்றி
பெரியோன் நினைவன்றி என நவின்றார்

694. பேசாதிருப்பதும் தனிக்கு மதும்
பெரியோன் தனை அஞ்சி பாவத்தின்மேல்
மோச மறக் கரைந்தழுகிறதும்
மொழிந்தார் இது ஸுன்னத் ஆகுமென்றே

695. படையால் இறந்தோரை உலமாக்களை
பதியிலுள சீமான் தங்களையும்
கடுகக் கொடுவந்து முதல் கேள்வியாய்
கத்தா கடினமாய் கேட்பான் என்றார்

696. பீஸபீல் தனில் பட்டோருடன்
பெரியோன் உரைப்பான் உன்அமல் ஏதென்றே
பேசுவான் பட்டேன் உனக்கே என்றே
பெரியோன் உரைப்பான் பொய்பகர்ந்தாய் என்றே

697. வாசமுள நல்ல தீரனென்று
மனித ருரைத்திடப் பட்டா யென
தோஜ கெனும் தீயில் முகங்கவிழ
துய்யோன் விடுவான் என்றார் இரசூல்

698. இல்மைப் படித்தவன் தன்னுடனே
இயம்புவான் ஆதி ஏது அமல்
கல்வி தனைக்கொண்டு செய்தாய் என்றால்
கவல்வான் அவன் இதின்படி நடந்து

699. சொல்லி அறிவித்தேன் மனுவுக்கென்பான்
துய்யோன் திருவுளமாவான் அப்போ
பொல்லாப் பெரும்பொய்யை நீ பகர்ந்தாய்
புவியோர் உனை ஆலிம் என்றுசெப்ப

700. கல்லை யறப் படித்தாய் எனவே
கடிந்த கோபமாய் முனிந்தவனை

தொல்லை நரகத்தில் விடுவான் என்றார்
தோகை மயிலான நபி இரசூல்